விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 267 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (12.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# இலங்கையின் எதிர்காலத்துக்கு பொறுப்புக்கூறல் அவசியம்

## ஐ.நா மனித உரிமை பிரதி ஆணையாளர்



(ஜெனிவா)

- ஈஸ்டர் தாக்குதலுக்கு சுயாதீனமான விசாரணை அவசியம்.
- தேர்தல் நடத்துவதை தாமதப்படுத்தக்கூடாது.
- ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையை மறுக்கக்கூடாது.
- கடந்த கால மனித உரிமை மீறல்களை இலங்கை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாது காப்பதில் பொறுப்புக் கூறல் அவசியம்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணையை இலங்கை 02

## ஐ.நா தீர்மானத்தை நிராகரிக்கின்றோம்

### ஜெனிவாவில் இலங்கை



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது என ஜெனிவா ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர 15

## பயங்கரவாத சட்டத்தை இலங்கை நிறுத்த வேண்டும்

### ஐ.நாவில் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்

(ஜெனிவா)


இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டம், சர்வதேச சட்டங்கள், சர்வதேச தராதரங்களை பின்பற்றும்வரை அதனை பயன்படுத்துவதை இடைநிறுத்தி வைக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் பொறுப்புக் 15



## நல்லூர் வேலவனுக்கு

### புதிய சப்பறம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்வேலவன் இன்றைய தினம் புதிய சப்பறத்தில் வீதியுலா வரவுள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு 16

### கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

## ஒன்றின் மீது ஒன்றாக பல எலும்புக்கூடுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும், ஒன்றின் மீது ஒன்று பல அடுக்காகவும் காணப்படுவதால், எத்தனை எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன என்பதை இனங்காண்பதில் சவால்கள் 15



## புகையிரத இயக்குநர் சங்கம்

### பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத இயக்குநர்கள் 16

## நல்லூர் கந்தசுவாமியார் பரியேறி வந்தார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத் தின் 22 ஆம் நாள் திரு விழாவாகிய "ஒரு முகத்திருவிழா" 16



## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோர் விபரம் தருக

### ஜெனிவாவில் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பத்து பேரின் விபரங்களை தருமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்திடம் பல நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன என ஐக்கிய நாடுகளின் பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீவ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அர 16

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி அ.உதயகுமார் அவர்களின் அன்புத் தந்தை

**திரு.**

**செல்லத்துரை சிவபாதம்**



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1948.04.07 மறைவு 2023.09.11

**இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

(17051)



# ஈரவிழிகளுடன் 11ம் ஆண்டில்

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)**



வையத்துள் 12.07.1943 தெய்வத்துள் 13.09.2012

திதி : ஆவணி திரயோதசி தேய்பிறை 12.09.2023

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.45/2 சாத்திரியார் கோட்டம், விசுவமடு. (17025)

பாசமுடன் குடும்பத்தினர்



# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 - 12 - 1951

உதிர்வு 14 - 09 - 2020

அமரர்

**கோபாலபிள்ளை மகாலட்சுமி**

ஆண்டு மூன்று ஆனதம்மா
மாநிலத்தில் நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு
உறவுகளை தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டாய்
எம்மையெல்லாம் அழவிட்டு
இறைவனை நாடி விட்டாய்
உன்னை எண்ணி தினம் தினம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை அம்மா
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

தாயகம் உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (17027)

பிரிவுத் துயருடன் : குடும்பத்தினர்


## இலங்கையின்...

அரசாங்கம் மேற்கொள்ள வேண் டும் என ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அது சர்வதேச உதவியுடனும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுமையான பங்களிப்புடனும் இடம்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள இலங்கை மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளில் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க அரசாங்கம் விசாரணைகள் மற்றும் வழக்குகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உண்மையைத் தேடுவது மட்டும் போதாது என்றும் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களை நடத்துவதை தாமதிப்பதும் 13வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளை மறுசீரமைப்பதும் அரசியலில் பங்கெடுப்பது மற்றும் வாக்காளர்களின் சுதந்திரமான வெளிப்பாடு ஆகியவற்றிற்கான உரிமைகளை மட்டுப்படுத்துகின்றது.

அரசாங்கத்தின் பொருளாதார மீட்சி கொள்கைகள் பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான அதன் கடப்பாடுகளால் வழிநடத்தப்படவேண்டும்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமைகளை மறுப்பது மக்கள் தங்கள் உண்மையான துயரங்களை வெளிப்படுத்துவதை ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதை தடுக்கும் இதனால் நாட்டில் மேலும் பதற்றம் உருவாகும்.

உண்மையை கண்டறிவது மாத்திரம் போதுமானதல்ல அதனுடன் பொறுப்புக் கூறலிற்கான தெளிவான அர்ப்பணிப்பும் இணைந்திருக்க வேண்டும் என பிரதி மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தினார்.

(ம-7)


# வேலையாட்கள் தேவை

**அலுவலக ஊழியர்கள் - O/L, A/L தகைமையுடன்**

**வயது 20-30 (பெண்)**

**சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்**

(17049)

எங்களைத் தொடர்பு கொள்ள

SST சன்சக்தி ரேடர்ஸ்

www.sunsakthy.com

www.facebook.com/sst.sunsakthy



# WE ARE HIRING AN ACCOUNTANT

01. Process payments & quotations
02. Issue invoices to customers based on services
03. Make and track payments
04. Book keeping and keep up records
05. Key data in to company accounting system
06. Responsible for the proper coding & reconciliation of all career commission statement to individual client account
07. Assist in the processing of daily cash receipt , as necessary

**Requirements & qualification**

01. Should have diploma/higher diploma/degree in accounting
02. Should have knowledge in accounting package
03. Age preferably below 35 years
04. Apply **only boys those who living in jaffna**
05. Minimum of one experience in accounting or finance

**Interested candidates can apply before 15.09.2023 through indeed using the mail your CV via** greensolarholdinglanka@gmail.com **or** info@gshl.lk

(C-7238)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் கடந்த ஆண்டில் 192 தற்கொலைகள்

## புள்ளிவிபரத் தகவலில் அதிர்ச்சி

**(கொழும்பு)**

**பொருளாதார நெருக்கடியால் கடந்த 2022 ஆம் ஆண்டு 192 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சு புள்ளி விபரங்களின் அடிப்படையில் தயாரித்த கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 2022 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதில் 2 ஆயிரத்து 832 பேர் ஆண்கள் எனத் தெரியவந்துள்ளது. இது 83% ஆகும்.

பொருளாதாரச் சிக்கல்களால், 2022 இல் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 192 ஆக உள்ளது. இது 5.06% ஆகக் காட்டப்பட்டுள்ளது.

குடும்ப தகராறு காரணமாக 593 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இது 17.04% எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 274 பேர் போதைக்கு அடிமையாகி பொருளாதார நெருக்கடியால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது 8% ஆகும்.

மனநல கோளாறுகளால் பாதிக்கப்பட்ட 412 பேர் தற்கொலை செய்து கொண்டனர். இது 12% ஆகும்.

இதேவேளை கடந்த 3 வருடங்களில் 9 ஆயிரத்து 700 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

மேலும் 2023 ஆம் ஆண்டு தொடர்பான தற்கொலைத் தரவுகளை சேகரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2023 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்களை சுகாதார அமைச்சினால் பெற முடியவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மட்டக்களப்பில் நிலநடுக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கடற்கரையில் இருந்து சுமார் 310 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஆழ்கடல் பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணி அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.65 ஆக பதிவாகியுள்ளதோடு இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## 2 புதிய வரிகள்

(கொழும்பு)

அரசுக்கு கூடுதல் வருவாயை உயர்த்துவதற்காக, அடுத்த ஆண்டு, மேலும் இரண்டு புதிய வரிகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் எண்ணியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

செல்வவரி மற்றும் பரம்பரைவரி என்பனவே அடுத்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இதில் செல்வவரி என்பது ஒருவர் கொண்டிருக்கும் சொத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். பரம்பரை வரி என்பது ஒருவர் தமது மூதாதையரின் சொத்தில் இருந்து ஈட்டும் வருமானத்தின் மீது விதிக்கப்படும் ஒரு வகை வரியாகும்.

நாட்டின் நிதியை மேற்பார்வையிடும் புதிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழு சமர்ப்பித்த அறிக்கையின்படி, அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும் இந்த வரிகளுக்குத் தேவையான சட்டத்தை உருவாக்குவதற்கு நிதி அமைச்சு பணிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

(கொழும்பு)

ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள்முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி-5)

# இலங்கையின் கடன் நெருக்கடிக்குத் தீர்வு காண ஜி-20 நாட்டுத் தலைவர்கள் இணக்கம்

## — வெள்ளை மாளிகை அறிக்கை —




(கொழும்பு)

இலங்கை, கானா போன்ற நாடுகளின் கடன் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு ஜி-20 நாடுகளின் தலைவர்கள் இணங்கியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜி-20 நாடுகள் அர்த்தபூர்வமான கடன் நிவாரணத்தை வழங்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் மூலம் கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக எதிர்கொண்ட பொருளாதார அதிர்ச்சியிலிருந்து மீள முயலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் மீண்டும் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

அதேவேளை, இலங்கை, கானா போன்ற நாடுகளின் தொடரும் கடன் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான தங்களின் முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு புதுடில்லியில் தலைவர்கள் தங்கள் அர்ப்பணிப்பை வெளியிட்டனர்.

மேலும் உலக வங்கி சர்வதேச நாணயநிதியத்தின் கூட்டங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி பைடன் தெரிவித்தார் எனவும் வெள்ளை மாளிகை வெளியிட்டஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 3 தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்க அனுமதி

(கொழும்பு)

3 தனியார் மருத்துவ கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதேதரத்தில் தனியார் மற்றும் அரச பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டால் அதிலிருந்து சிறந்த வைத்தியர்களை நாம் உலக மருத்துவத் துறைக்கு வழங்க முடியும்.

சுகாதாரத்துறை அமைச்சர் என்ற வகையில் 3 தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க தமது அமைச்சு அனுமதி அளித்துள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (நி-5)

## மழையுடனான காலநிலையால் நீர்மின் உற்பத்தியின் அளவு அதிகரிப்பு

(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில், அதிக மழையுடனான காலநிலை நிலவுவதன் காரணமாக நீர்மின் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி 15 சதவீதமாக காணப்பட்டநீர் மின் உற்பத்தி 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதன் பொதுமுகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், மழை பெய்து வருவதால் மின் தேவையும் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு மணித்தியாலத்துக்கு 45 ஜிகாவோட் தேவையாக இருந்த மின்சாரத்தின் தேவை தற்போது மணித்தியாலத்துக்கு 42 ஜிகாவோட் ஆக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

## அரச வெற்றிடங்களுக்கு விரைவில் ஆட்சேர்ப்பு

### உள்நாட்டலுவல்கள் அமைச்சு

(கொழும்பு)

பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்தில் உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளில் இருந்து உரிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்கள், தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர் எனக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு உட்பட்ட ஏனைய நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் முறைகேடுகள் தொடர்பில் 1905 என்ற குறுகிய தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும் எனவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## பசிலை சந்தித்தார் ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளரான பசில் ராஜபக்ஷவை சந்தித்துள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட ஒரு வெளிப்படையான நடவடிக்கையாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண விளையாட்டு போட்டியில் மன்னார் கல்வி வலயம் முதலிடம்



வடமாகாண ரீதியாக உள்ள கல்வி வலயங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் அதிக புள்ளிகளைப் பெற்று மன்னார் கல்வி வலயம் மாகாண ரீதியாக முதலாம் இடத்தை பெற்றுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மட்ட மாகாண விளையாட்டு விழா நிகழ்வானது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்களாக நடைபெற்றது.

இதில் மன்னார் கல்வி வலயம் மொத்தமாக 720 புள்ளிகளை பெற்று, முதலாம் இடத்தினையும் வலிகாம கல்வி வலயம் இரண்டாம் இடத்தினையும் முல்லைத்தீவு கல்வி வலயம் மூன்றாம் இடத்தினையும் யாழ். கல்வி வலயம் நான்காம் இடத்தினையும் மடுகல்வி வலயம் ஐந்தாம் இடத்தினையும் வடமராட்சி, கிளிநொச்சி தெற்கு, துணுக்காய், வவுனியா தெற்கு, தென்மராட்சி, கிளிநொச்சி வடக்கு, வவுனியா வடக்கு முதலான கல்வி வலயங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-285)

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கனிஷ்ட, சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அப்போட்டியில் யா/இராமநாதன் கல்லூரி மாணவி ர.சுவேதா 16 வயதுப்பிரிவு 800m இல் பங்குபற்றி தங்கப் பதக்கத்தையும் நீ.மஸ்மிதா திறந்த வயதுப் பிரிவு தட்டெறிதலில் பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தையும் ஜெ.ரூபிகா 16 வயதுப் பிரிவு ஈட்டி எறிதலில் பங்குபற்றி தங்கப் பதக்கமும் கோலூன்றிப் பாய்தலில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

• • • • • • • • • • • • • • •

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் யா/வீமன்காமம் மகா வித்தியாலய மாணவிகளான எஸ்.லிவின்சிகா- ஈட்டியெறிதல், முப்பாய்ச்சல் ஆகிய இரு போட்டிகளில் பங்குபற்றி இரண்டாமிடத்தையும் எஸ்.கோபிகா 100m, 200m, ஓட்டப்போட்டிகளில் பங்குபற்றி மூன்றாம் இடத்தினைப் பெற்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-105)



மாகாணமட்ட எறிபந்து போட்டிகள் கடந்த மாதம் வவுனியா கனகராஜன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் யா/இராமநாதன் கல்லூரியின் 17 வயது எறிபந்து அணி மாகாண சம்பியனாக தெரிவானது.

# குருநகர் பாடுமீன் அணி வெற்றி



இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் உதைபந்தாட்ட போட்டி இளவாலை புனித கென்றிய ரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு ஈஸ்ரன் அணி மோதியது.

ஆரம்பத்தில் இருந்து மிக விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய குருநகர் பாடுமீன் அணியின் முன்கள வீரர்களான கீதன் மற்றும் தனுஸ் அடுத்தடுத்து 3 கோல்களை போட பதிலுக்கு ஈஸ்ரன் 1 கோலை போட முதல் பாதி யாட்டத்தில் 3:1 என்ற நிலை யில் பாடுமீன் அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் மீண்டும் பாடுமீன் அணி வீரர் கீதன் ஒரு கோலைப்போட ஆட்டம் 4:1 என்ற நிலையில் பாடும் மீன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

பாடும் மீன் அணிசார்பாக 3 கோல்களை கீதனும் 1 கோலை தனுசும் பெற்று கொடுத்தனர். (6-106)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்
## சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச்



-கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

நோவக் ஜோகோவிச், ரஷ்ய வீரர் மெத்வதேவுடன் மோதிய இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஜோகோவிச் அதிரடியாக ஆடினார். முதல் செட்டை 6-3 என ஜோகோவிச் எளிதில் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் மெத்வதேவ் பதிலடி கொடுக்கும் விதமாக ஆடினார்.

இதனால் ஜோகோவிச் 7-6 (7-5) என போராடி கைப்பற்றினார். மூன்றாவது செட்டை ஜோகோவிச் 6-3 என வென்றார். இறுதியில் ஜோகோவிச் 6-3, 7-6 (7-5), 6-3 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இது ஜோகோவிச்சின் 24 ஆவது கிராண்ட்சிலாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# டொனால்ட் ட்ரம்புடன் டோனி விளையாடிய கோல்ஃப் வீடியோ

## வலைத்தளங்களில் வைரல்

இந்திய கிரிக்கெட்டர் எம்.எஸ்.டோனி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து கோல்ஃப் விளையாடிய வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள இந்திய அணியின் முன்னாள் கப்டன் டோனி, அங்கு நடந்த கோல்ப் போட்டியில் கலந்து கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் அழைத்ததின் பேரில் அவருடன் இணைந்து கோல்ஃப் விளையாடினார் டோனி.

இந்த நட்பு ரீதியான போட்டியின் ஒரு காட்சியை துபாயைச் சேர்ந்த தொழிலதிபர் ஹிதேஷ் சங்வி தனது இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

தற்போது ட்ரம்ப் மற்றும் தோனி ஆகியோரின் புகைப் படம், விளையாடும் வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

நட்பு ரீதியான கோல்ஃப் போட்டியில் தோனி வெற்றி



பெற்றதை அவரது ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் கிரிக்கெட் கப்டன் ஆகிய இரு வேறு பின்னணி கொண்ட பிரபலங்கள் ஒன்றாக விளையாடுவது நெட்டிசன்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பில் அச்சம் ஏன்?

## சந்திரிகா கேள்வி

(கொழும்பு)

**மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவே சிறந்த தருணமாகும். இதைவிட நல்ல நேரம் கிடைக்கப்போவதில்லை.

எனவே, வாய்ப்பை சரிவர பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை எனவும் மேற்படி அதிகாரங்களை வழங்கினால் நாடு பிரியும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல எனவும் தெரிவித்தார்.

நாட்டில் போர் முடிவடைந்தாலும் போருக்கு வித்திட்ட பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. அதற்கான ஆரம்பகட்ட முயற்சிகூட எடுக்கப்படவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அது சட்டபூர்வமானது. அதனை அமுல்படுத்து மாறே தமிழ்த் தலைவர்கள் கோருகின்றனர். இதனை ஏன் அமுல்படுத்த முடியாது?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இது தொடர்பில் என்னுடனும் பேச்சு நடத்தினார்.

முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என நான் கூறினேன். ஆனால் நாட்டில் மாகாணசபைகள் இயங்கவில்லை. அதிகாரத்தை பகிர மாகாணசபை இருக்க வேண்டும்.

அப்படியானால் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

13 இல் பொலிஸ், காணி அதிகாரம் பற்றித்தான் விமர்சனங்கள் எழுகின்றன. பொலிஸ் அதிகாரம் வழங்கினால் தனிநாடு உருவாக்கப்படும் எனவும் கூறுகின்றனர். முதலில் 13 இல் என்ன உள்ளது என்பதை படித்து அறியவும். பொலிஸ்மா அதிபர் தேசிய அரசால் நியமிக்கப்படுகின்றார்.

அவரால்தான் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுகின்றனர். பொலிஸ்மா அதிபரின் கீழ்தான் இவர்கள் உள்ளனர்.

மாகாண பொலிஸாருக்கான பயிற்சிகூட முழுமையாக மத்திய அரசால்தான் வழங்கப்படும். ஆயுத வழங்கலும் மத்திய அரசு வசம் தான் உள்ளது. அப்படியானால் பொலிஸ் அதிகாரத்தில் உள்ள அச்சம் என்ன?

மாகாணசபை எல்லை மீறி செயற்பட்டால் முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் எடுக்கலாம். இராணுவத்தையும் அனுப்பலாம் எனவும் தெரிவித்தார். (நி)




## அழகான முருகனுக்கு அழகான சப்பரம்

புதிய சப்பறத்தில் வருகின்ற முருகா- எமக்கு
புது வாழ்வை தருவாயோ-முருகா
அழகான முருகனே - உனக்கு
அழகான புதிய சப்பறம்
வள்ளி தெய்வானையோடு வீற்றிருக்கும் வேலவா
உள்ளே மட்டுமல்ல வெளியேயும் உன் வேல் அய்யா
சப்பறத்தை மறைத்து வேலாக காட்சி கொடுத்தவனே
அதற்காக காணியை அன்பரிடம் பெற்றவனே
அங்கிருந்து தான் எழுகின்றேன் -உனது
அருள் ஆட்சியை காட்டுமைய்யா!

-நல்லைக் குகன்-

## வேண்டும் வரம் தரும் வேலவா

கந்த கோட்டத்திலே
குழந்தையாக குமரனாக கிழவனாக
வடிவேலுடன் காட்சி தரும்
அலங்கார கந்தனே
தேனமுதத் தமிழ் தந்த
முத்தமிழ் முருகனே!
வேண்டும் வரம் தருவதற்காக
வள்ளி தேவயானையுடன்
புள்ளி மயில் மீது உலாவரும்
ஆனைமுகன் தம்பியோ
அடியவர்களை காத்தருள்வாய்

து.துளசிபன்,
இடைக்காடு.

# இராசிபலன்

12.09.2023
ஆவணி 26, செவ்வாய்க்கிழமை
திரியோதசி பின்னிரவு 3.46 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 1.18 மணிவரை

சுபநேரம்-10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்.

வளவன்


மேஷம்

ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


ரிஷபம்

விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மிதுனம்

ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்,. போசன சுகமுண்டு.


கடகம்

பயணங்களால் சுபசெய்திகளைப் பெறுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.


சிம்மம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் விரயம் மேலோங்கும் நாள்.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செல்வ நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

இல்லத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.


தனுசு

தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது.


மகரம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.


கும்பம்

கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.


மீனம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பகலுக்கு கண்கள் உண்டு, இரவுக்கு செவிகள் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் 22 ஆம் திருவிழாவான மாம்பழ திருவிழா( தண்டாயுதபாணி உற்சவம் ) நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது. காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து பிள்ளையாரும் முருகபெருமானும் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு நாளை 13 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இடம்பெறும்.

இதில் 6.45 மணிக்கு இடம் பெறவுள்ள இசையரங்கில் பாட்டு-நித்தியானந்தன் சிவாஜன், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-தி.அரன்ராஜ், மோர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறம் இசையரங்கிலே பாட்டு-சாயிலக்சுமி லோகீஸ்வரன், மிருதங்கம்-எஸ்.ஜி.எஸ்.சுவாமிநாதன் சர்மா, வயலின்-சு.வாசுகி, கஞ்சிரா-சு.அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# இயங்க முடியாத நிலையில் திக்கம் வடிசாலை

(கரணவாய்)

புனரமைப்பு செய்யப்பட்ட திக்கம் வடிசாலை இயங்க முடியாத நிலையில் உள்ளது.

இதனால் வடமராட்சி பகுதியில் சீவல் தொழிலை வாழ்வாதாரமாக கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் வேலை இழந்து காணப்படுகின்றார்கள்.

தொழிலாளர்களுக்கு சம்பளம் தர முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது என கூறி அவர்களையும் வேலையிலிருந்து இடைநிறுத்தி உள்ளார்கள். தற்பொழுது முற்று முழுதாக மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

அந்த தொழிற்சாலையை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டு சென்றவர்கள் இன்று நடுரோட்டில் நிற்கின்றார்கள். எந்த ஒரு அரசியல்வாதிகளும் அவர்களுக்கு உதவி செய்வதற்கு முன்வரவில்லை.

தேர்தல் காலங்கள் வரும் பொழுது முண்டியடித்து வருவார்கள். தற்பொழுது தங்களுடைய நிலையை யாரும் எட்டிப் பார்ப்பதில்லை என தொழில் செய்த மக்கள் விசனம் தெரிவித்தனர். (நி-60)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆன்மிகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி மற்றும் ஆன்மீகப் பிரசாரகர் பட்டயக் கற்கை நெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் நல்லை திருஞான சம்பந்த ஆதீன கலாமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்னன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில்பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசாவும் சிறப்பு அதிதியாக புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்றம் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

# கர்நாடக சங்கீதப் போட்டியில் வீமன்காமம் மாணவிகள் இரண்டாமிடம்



(யாழ்ப்பாணம்)


வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் யா/வீமன்காமம் மகாவித்தியாலய மாணவிகள் சிரேஷ்ட பிரிவில் குழு இசையில் வலய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். (நி-6-105)

# மலர் மழையில் மால் மருகன் தேரேறி வரும் காட்சி

சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளை நடைபெற உள்ளது. சைவத்தமிழ் மக்களின் தலையாய திருக்கோவிலாகிய நல்லூர் கந்தனின் உற்சவகாலத்தில் தேர்த் திருவிழா பெருவிழாவாக கருதப்படுகிறது. அதிகாலையில் பூசை வழிபாடுகள் நடைபெற்று காலை 7 மணிக்கு ஆறுமுகப் பெருமான் திருத்தேரில் அற்புதமாக காட்சியளிப்பார்.

தேரேறும் ஆறுமுகன் முற்றாக தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் காட்சி வேறெங்கும் காண முடியாது. முருகனின் முடியில் இரத்திணங்கள், வைரங்கள் பதிக்கப்பட்டு பார்ப்பவர்களை திகைக்க வைக்கும் அளவுக்கு கோடி ரூபாய் பெறுமதியான ஆபரணங்கள் முருகனை சிறப்பிக்கும்.

வாசனை நிறைந்த மல்லிகை மாலையும் தங்க மாலைகளுக்கு நடுவே காட்சியளிக்கும். ஆறுமுகப் பெருமானுக்கு தேரில்அன்று அணிகின்ற முற்று முதலான தங்க உருத்திராட்சம் வேறெ ங்கும் காண முடியாது. முடியில் இருந்து பாதம் வரை அணி அணியாக பதக்கங்களால் சரீரம் மறைக்கப்பட்டிருக்கும். எப்படி அலங்கரிக்கிறார்கள் என்று எல்லோரையும் ஏங்க வைக்கும். அடியார்களின் தோளில் வீறு கொண்டு தேரை நோக்கி வரும் காட்சி வர்ணிக்க முடியாதது. பூவினுக் கருங்கலமாகிய பொங்கு



நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

தாமரையை கோபுர வாயிலிலிருந்து தேரேறும் வரை மழை போல் சிந்து வார்கள். மலர் மழையில் மால் மருகன் இனிய காலையில் தேரேறுவார்.

இந்திய சிற்பாசாரியார்களால் ஐம்பத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட அற்புத தேர் ஆயத்தமாக நிற்கும். கொடி ஏறிய நாள் முதல் திருத்தேர் செப்புத்தகடுகளை மினுக்கத் தொடங்கி விடுவார்கள்.

அதனால் தேரில் அன்று தேர் முடி தொடக்கம் சில்லு அச்சாணி வரை ஐம்பொன் உலோகங்களும் அன்று மலர்ந்த செந்தாமரை போல் அனைவரையும் ஈர்க்கும். தேரில் முருகன் ஏறும் அழகு தனித்துவமானது. தேரேறும் பலகையை ஆறு முகன் இருந்து சுற்றி பார்ப் பதற்கு வசதியாக சுலபமான முறையில் உருவாக்கியிருக் கிறார்கள். அடியவர்கள் அப் பலகையில் முருகனை இறக்கியதும் அந்தணர்கள் சுழலும் பலகையில் ஆறுமுகனை ஒரு முறை சுற்றுவார்கள். தேரேறுவதற்கு முதல்அவன் எல்லா திசையையும் சுற்றிப் பார்ப்பது போல் இருக்கும்.

முருகன் தேரில் ஏறும் வரை அரோகரா என்ற ஓசை வானைப் பிளக்கும். தேரில் முருகன் வரும் காட்சியை காத்திருந்து காணும் பக்தர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிவர். வடம் பிடித்து வாழ்வு கேட்பதற்காக அதிகாலை முதல் தேரடியில் திருக்கூட்டம் காத்திருக்கும். அதற்கு மத்தியில் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும் தேங்காய் தோல் வலிமை உடைய இளைஞர்கள் சில மணித்துளிகளில் உடைத்துக் குவிப்பர். தேர் புறப்படும் வேளை அலைகடலுக்கு மேலே கப்பல் ஒன்று செல்வது போல் கந்தப்பெருமானின் தேர் மிதந்து செல்லும். பஞ்ச மணி கோபுரங்கள் வடிவேலன் வருவதை அறிவிக்கும்.

பேரிகை முழங்கும். கற்பூர வாசனை காற்றில் கலந்து கந்தனின் வருகையை வரவேற்கும். வருடத்தில் ஒரு நாள் இக் காட்சியை காண்பதற்கு என்ன புண்ணியம் செய் தோம் என்று எல்லோரும் அகமகிழ்வார்கள்.

நான்கு வீதிகளிலும் வரவேற்பு பந்தல்கள், படையல்கள் வடம்பிடிக்கும் அடியவர்க்கு வயிராற கொடுப்பதற்கு காத்திருப்பர். தேர் இருப்பிடம் வரும் போது கைகளைஉயர்த்திஅப்பனே! அப்பனே! என்று பக்தர்கள் ஆரவாரிப்பர். இந்த திருவருள் காட்சியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. கண்ணாரயக்கண்டு, நெஞ்சார வழிபாடு செய்து பக்தர்களின் அனுபவத்தை அவரவரே உணர்வர்.

பழைமையும் பெருமையும் மிக்க நல்லூர்க் கந்தனின் திருத்தேர் நாளில் எம்மண் விடிய வேண்டும் என்று மன்றாடுவோம். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட ஆறுமுகப் பெருமானை உதவு என்று உளமார வேண்டுவோம்.

எங்கள் மண்ணின் நீதி நிலைத்திட வெற்றி வேலாயுதா விரைவில் காத்திடு என்று ஒன்றுபட்டு பிரார்த் திப்போம். திருத்தேர் நாளில் பக்தர்களுக்கு இதயபூர்வ மான வாழ்த்துக் களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

கலாநிதி.ஆறு.திருமுருகன்,
தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழருக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டத் தவறிய ம.உ.ஆணைக்குழு

**–சிறீதரன் எம்.பி–**

(கண்டாவளை)

ஐக்கிய நாடுகள் ஆணையகத்தின் முன்வரைபு தமிழ் மக்களுக்கு இந்த மண்ணிலே நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பிலே அதிக கரிசனை எதனையும்கொண்டிருப்பதாக தெரியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகமான அறிவகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது கடந்த 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் ஆணையகத்தினுடைய முன் வரைபு என்பது தமிழ் மக்களுக்கு இந்த மண்ணிலே நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பிலே அதிக கரிசனை எதனையும்கொண்டிருப்பதாக தெரியவில்லை.

மேலும் இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் தொடராக தமிழ் மக்கள் மீது இன அழிப்பு செய்யப்படுவதும் அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டு தொல்பொருள் அடையாளங்கள் என்ற பெயரிலேயே பொதுமக்களினுடைய காணிகள் கபளீகரம் செய்யப்பட்டு வடக்கு -கிழக்கிலே புதிதாக 160 இற்கும் மேற்பட்ட விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்தும் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டிலே நீக்கப்படவில்லை. வடக்கு -கிழக்கு மண்ணிலேயே தமிழர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் ஒரு நீதியற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்பதை மனித உரிமைகள் ஆணைக்குழு தன்னுடைய அறிக்கையிலே சுட்டிக்காட்ட தவறியுள்ளது என மேலும் அவர் தெரிவித்தார். (நி-6-315)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 6<br>உயரம்: -<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் / வெளிநாடு<br>தொ.இ: B/13894 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 26<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13626 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13895 | பிறப்பு: 1995 R.C<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 9இல் சூரி. செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L அழுகுக்கலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/13623 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : பூரம்<br>கி.பா: 25<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு : உத்தியோக முள்ள பெண்<br>தொ.இ: B/13896 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 40<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: BCA (India)<br>விவாகரத்தானர் மணமகள்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்/படித்தவர்<br>தொ.இ:G/13625 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>கி.பா: 84<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: விவாகரத்தானவர்<br>மணமகன் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுள்ள பெண்.<br>விவாகரத்தானவர்<br>தொ.இ: B/2117 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம் : 158 Cm<br>தகைமை/தொழில்: நுண்கலைப்பீட பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரசாங்க உத்தியோகம்<br>தொ.இ:G/13693 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# நல்லூரில் 'குழந்தை பழனி ஆண்டவன்'

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த குழந்தையின் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

நல்லூர் ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வரும் நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை மாம்பழ திருவிழா நடைபெற்றது.

சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நாரதர் மாம்பழமொன்றை வழங்கினார். அதனை யாருக்கு கொடுப்பது என தீர்மானிக்க. முதலில் உலகை சுற்றி வருபவருக்கே இந்த மாம்பழத்தை தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையாருக்கும் முருகனுக்கும் கூறினர்.

உடனேமுருகப்பெருமான் மயில் மீதேறி உலகை சுற்றிவர சென்ற போது. பிள்ளையார் சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து நீங்களே என் உலகம் எனகூறி மாம்பழத்தை பெற்றுக்கொண்டார். உலகைசுற்றிவந்தமுருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் தனது நகை. உடை அனைத்தையும் துறந்த முருகன். ஆண்டி கோலத்தில் பழனி மலையில் போய் அமர்ந்தார். இந்த புராண கதையை மையமாக வைத்தே மாம்பழ திருவிழா நடைபெறும்.



அந்நிலையில் நேற்று நடைபெற்ற மாம்பழ திருவிழாவின் போது. குழந்தை ஒன்றினை பெற்றோர் பழனியாண்டவர் கோலத்தில் உடுப்பு உடுத்தி ஆலயத்திற்கு அழைத்து வந்திருந்தனர். அந்த குழந்தை பலரின் கவனத்தை ஈர்த்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

# இம்மாதத்திற்குள் புதிய அமைச்சர்கள் நியமனம்?

(கொழும்பு)

இந்த மாதத்திற்குள் பல அமைச்சர்களின் பதவிகள் மாற்றியமைக்கப்படும் என்றும் புதிய நியமனங்கள் வழுங்கப்படும் என்றும் அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றம் குறித்து இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில். ஆளும் கட்சியுடன் இணைந்துள்ள அரசியல் கட்சிகளுக்குள் இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சர் மாற்றப்பட வாய்ப்பு உள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (நி)


# சிறுவர் இல்லத்தில் சிறுவர்கள் மேற்பார்வை பணிக்கு பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் சிறுவர்களை மேற்பார்வை செய்து அவர்களை சிறப்பாக வழிநடத்தும் பணிக்காக 25 தொடக்கம் 60 வயதிற்கு உட்பட்ட பெண் பணியாளர்கள் தேவையாக உள்ளது. விருப்பமுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது 18.09.2023 ஆகிய (சனி, ஞாயிறு) திகதிகளில் தங்களின் சுயவிபரக்கோவையுடன் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு காலை 11 மணி தொடக்கம் மதியம் 2.00 மணிக்கு முன்னர் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அலுவலக முகவரி**

**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**
**077 324 0950, 021 492 3118**

**ச.மோகனபவன்,**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.** (சி-7235)



# ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancy:

**Teacher - Science (English Medium) Gr 6-11**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 20th September 2023 to the address below:

**The Principal,**
**St.John's College,**
**Jaffna.** (சி-7237)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 196

## பிரதி உபகாரம் கருதாமல்

ஹரியின் சொந்த ஊர் திருச்சி. மணமானதும் மனைவி ஜெயந்தி ஊரான மதுரை வந்து "ஸ்ரீ மாருதி காபி பார்" என்ற பெயரில் ஒரு கடை நடத்தி வந்து கொண்டிருந்த ஹரி. ஒரு காலை வேளை பரபரப்பான கூட்டம். வந்தவர்களுக்கு தேனீர், காப்பி என்று தன் கையாலேயே ஆற்றி விரைந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார் ஹரி.

ஒரு வயதான அம்மா தயங்கித் தயங்கி ஹரியை நெருங்கி அவர் டீ ஆற்றிக் கொண்டிருந்த மேசை மீது ஒரு ஜோடிக் கொலுசுகளை வைத்தார். "என்னம்மா கொலுசை வைக்கிறீங்க?" என்று டீ ஆற்றுவதை நிறுத்திவிட்டுக் கேட்டார் ஹரி." தம்பி..எதிரே உள்ள சவக்கிடங்கில் மகன் உடல் கிடக்கிறது. அடக்கம் செய்ய காசு இல்லை. அதான் கொலுசை அடகு வைத்து.." என்று இழுக்கிறார் அந்த வயதான அம்மா.

"சவ அடக்கம் செய்ய இந்தக் கொலுசை அடகு வைத்து அதில் கிடைக்கும்பணத்தில்எதுவும்செய்யமுடியாதேஅம்மா..இந்தநேரத்தில் அடகுக் கடையும் திறந்து இருக்காதே" என்ற ஹரி, டீக் கடையில் வேலை பார்க்கும் ஒருவரிடம் கடையை ஒப்படைத்து விட்டு கிளம்பிவிட்டார்... "எப்படியும் அந்த வயதான தாய்க்கு உதவி விட வேண்டும்" என்ற வைராக்கியம் அவர் மனதில் குடிகொண்ட நாள் அது!

அங்கே தினசரி வரும் பலர் பணமில்லாத ஏழைகளாக இருந்தார்கள். அடக்கம் செய்யக் காசில்லாமல் அவர்கள் அங்கிருந்து வீட்டுக்குச் சவத்தை எடுத்துச் செல்லக்கூட முடியாமல் தவித்த தவிப்பு ஹரி மனதை உலுக்கியது. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தன் மனைவியிடம் ஆலோசனை செய்தார். இருவரும் ஆம்புலன்ஸ் வாங்கி இப்படிப்பட்ட ஏழைகளுக்கு உதவலாம் என்று முடிவு செய்தார்கள்.

தம்மிடம் இருந்த சொற்ப நிலத்தை விற்று அதில் ஆம்புலன்ஸ்களை வாங்கினார்கள். இப்போது ஆம்புலன்ஸ்கள் ஆறும் மதுரை நகரை சுற்றிச் சுற்றி வருகிறது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஹரிக்குப் பிடித்த தலைவர். எனவே ஆம்புலன்ஸ்"க்கு நேதாஜி என்ற பெயரைச் சூட்டி இருக்கிறார்.

பணம் இல்லாதவர்களின் சடலங்களை ஏற்றிச் செல்வதோடு மேற்கொண்டு அவர்களுக்கு ஆகும் செலவுகளுக்கும் பணம் கொடுத்து உதவி வருகிறார் ஹரி! 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை தமிழகத்தில் அறிமுகம் ஆகும் முன்பே, மதுரையில் இலவச ஆம்புலன்ஸ் சேவையை முதலில் ஆரம்பித்தவர் ஹரி.

அசாதாரண நிலையில் மரணம் நிகழல் மற்றும் சாலை விபத்து எங்கு நடந்தாலும் உடனே அந்த இடத்திற்கு விரைந்து செல்லும் ஹரியின் ஆம்புலன்ஸ், உடனே ராஜாஜி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறது.

"இறந்துபோனவங்க நிச்சயமா கடவுளுக்குச் சமம்தான்! அதனாலதான், இன்றைக்கும் பிணத்தை தூக்குறதுக்கு முன்னாடி, அதைத் தொட்டுக் கும்பிட்டுட்டு நாங்க தூக்குறோம்!" என்று சொல்லும் 48 வயது ஹரி, தானே களத்தில் இறங்கி கூச்சப்படாமல், அச்சப்படாமல் பிணங்களைத் தூக்கி இறக்க அனைவருக்கும் உதவி செய்கிறார்.

"பணம் கொடுத்தால் வசதி படைத்தவர்களுக்குப் பொருள்! வசதி இல்லாதவர்களுக்கு, அவர்கள் கேட்பதற்கு முன்னர் இலவசமாகப் பொருள்!" இதுதான் இவரது கொள்கை!

"பிணத்துக்கான பொருளுக்கு பணம் கேட்குறது தப்போன்னு, எனக்குள்ளே ஏற்பட்ட ஒரு குற்ற உணர்ச்சிதான் நான் செய்ற இந்த உதவிகளுக்கான தொடக்கம்!" எளிமையாய் பேசும் ஹரி, சத்தமில்லாமல் இன்னொரு காரியமும் செய்து வருகிறார். அநாதைப் பிணங்களை எடுத்து வந்து, முறையாக பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தி, நல்லடக்கம் செய்வதை கடந்த 19 வருடங்களாகத் தொடர்கிறார்.

தென்மாவட்டங்களில் எங்கு விபத்து என்றாலும், காவல் துறையிடம் இருந்து உடனடியாக ஹரிக்குத்தான் தகவல் வருகிறது. உடல் எந்த நிலையில் இருந்தாலும், சற்றும் அருவருப்பு கொள்ளாமல் தொட்டுத் தூக்குவது இவரது வழக்கம்! இதுவரை, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உடல்களை இப்படி மீட்டிருக்கிறார்.

"பிணம் தூக்குறது ஒரு வேலையா?" என்று உறவுக்காரங்க எல்லாரும் என்கிட்டே இருந்து ஒதுங்கிட்டாங்க. இதுல எனக்கு வருத்தமில்லை. என்னைப் பொறுத்த வரைக்கும், நாம சேர்த்து வைக்கிற புண்ணியங்கள்தான், வாழ்ற நாட்களை சந்தோஷமாக்கும். எல்லாத்துக்கும் மேல, சவத்துக்கு செய்யும் தொண்டு, சிவனுக்கு செய்யும் தொண்டு என்று சொல்லும் ஹரி.....

## இந்தியாவில் இரத்தசோகையால் பெருமளவு பெண்கள் பாதிப்பு

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(டில்லி)

இந்தியாவில் 10 பெண்களில் 6 பெண்கள் இரத்தசோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுகாதார ஆய்வறிக்கை கூறியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரத்தசோகை என்பது இந்தியாவில் குறிப்பாக பெண்களைப் பாதிக்கும் முக்கியமான பொது சுகாதார பிரச்சினையாக இருந்து வருகிறது. இரத்த சோகை ஒரு நபரின் இரத்த சிவப்பணுக்களின் பற்றாக்குறையுடன் தொடர்புடையது. இதன் விளைவாக பலவீனம் மற்றும் சோர்வு ஏற்படுகிறது.

குழந்தை இல்லாத பெண்களை விட குறைந்தது இரண்டு குழந்தைகளுக்கு தாயாக இருக்கும் இளம்பெண்கள் அதிகளவில் இரத்தசோகைக்கு ஆளாகிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பாலூட்டும் தாய்மார்களுக்கு இரத்தசோகை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இளம் பெண்கள், நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பெண்களை விட இரத்தசோகையால் பாதிக்கப்படுவது குறைவு என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இது இரும்புச்சத்து நிறைந்த சிவப்பு அரிசியை உள்ளடக்கிய மாறுபட்ட மற்றும் சத்தான உணவின் காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (BHU) மற்றும் பிற நிறுவனங்களின் ஆய்வில், இந்தியாவில் 15 முதல் 19 வயதுடைய பெண்களின் மோசமான ஊட்டச்சத்து நிலை, பொருளாதாரம் மற்றும் சமூக காரணிகள், கல்வி, சிறுவயது திருமணம், தாய்மை உள்ளிட்ட காரணங்கள் இரத்தசோகையுடன் தொடர்புடையதாக தெரிய வந்துள்ளது. இந்தியாவில் 28 மாநிலங்களில் 21 வெவ்வேறு அளவுகளில் இரத்தசோகை பாதிப்பு அதிகரித்துள்ளதாக இந்த ஆய்வு கூறுகிறது. (ரி-5)

## உச்சம்

## மரண

(ரியாத்)

இந்த ஆண்டு
பேர்களுக்கு ம
கியுள்ளது.

பெரும்பாலான வழக்குகளில் சமூக ஊடக பதிவுகள் அல்லது போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மக்கள் இவ்

## உலகை உலுக்கிய செப்டெம்பர் 11 நேற்றுடன் 22 ஆண்டுகள் நிறைவ

(வோஷிங்டன்)

மனித வரலாற்றில் மிக மோசமான தீவிரவாத தாக்குதலாக கருதப்படும் செப்டெம்பர் 11 தாக்குதல் நடந்து நேற்றுடன் 22 ஆண்டுகள் நிறைவடைந்தது.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்டாலும், இந்தத் தாக்குதலுக்குப் பிறகு உலகின் பல நாடுகளின் தலைவிதியே மாறிவிட்டது.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நேற்று அமெரிக்கா முழுவதும் பல்வேறு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

செப்டெம்பர் 11 தாக்குதலில் இறந்தவர்களை நினைவு கூருவதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் அவரது மனைவியும் கலந்து கொண்டனர்.

இந்தத் தொடர் தாக்குதல்கள் செப்டெம்பர் 11, 2001 அன்று 19 அல்-கொய்தா தற்கொலை குண்டுதாரிகளால் நடத்தப்பட்டது.

4 குழுக்களாக பிரிந்த பயங்கரவாதிகள் 4 அமெரிக்க பயணிகள் விமானங்களை கடத்தினர்.



ஒவ்வொரு குழுவிலும் விமானத்தை கையாள்வதில் நன்கு பயிற்சி பெற்ற ஒரு தீவிரவாதி இருந்ததாக கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட இரண்டு விமானங்கள் நியூயோர்க்கில் உள்ள



## நைஜீரியாவி குழந்தைக

(அபுஜா)

வட மத்திய நைஜீரியாவில் ஒரு நீர்த்தேக்கத்தில் படகு கவிழ்ந்ததில் 26 பேர் உயிரிழந்தனர் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.


அம்மாநிலத்தின் மொக்வா உள்ளூராட்சிப் பகுதியில் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## சவுதி அரேபியாவில்
# ம் தொட்ட மரண தண்டனை
# ன பயத்தில் இளைஞர்கள்

**ண்டின் 8 மாதங்களில் சவுதி அரேபியா நீதிமன்றங்கள் இதுவரை 100**
**5 மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளதாக தகவல் வெளியா**



வாறு மரண தண்டனையை எதிர் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள் ளது. மேலும், அதிகாரிகளின் இந்த நடவடிக்கையினால் தற்போது சிறையில் இருக்கும் பல இளைஞர்கள் மரண பயத் தில் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், வன்முறையை தூண்டாத குற்றங்களுக்கு மரண தண்டனையை குறைப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. இருப்பினும் வருடாந்த மரண தண்டனைகளின்எண் ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. (நி-5)

## 1 தாக்குதல்;
## வடைந்தது!



உலக வர்த்தக மையக் கோபு ரங்கள் மீதும் மற்றொன்று பென் டகனின் மேற்குப் பகுதியிலும் விழுந்து நொறுங்கியது.

மற்றைய விமானம் பென்சில் வேனியாவில் விழுந்து நொறுங்கி பின்னர் வெள்ளை மாளிகை அல்லது வோஷிங்டன் டி.சி.யை தாக்க வந்ததாக கூறப்படுகிறது.

தொடர் தாக்குதல்களில் வெளிநாட்டினர் உட்பட 2,996 பேர் உயிரிழந்த சுமார் 25 ஆயிரம் பேர் காயமடைந்த 10 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் சொத்து சேதம் ஏற் பட்டுள்ளது எனஅமெரிக்கா மதிப்பிட்டிருந்தது.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்ற அல்கொய்தா மற்றும் அதன் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லே டனை தண்டிக்க அமெரி க்கா 2001இல் ஆப்கானிஸ் தானை ஆக்கிரமித்தது.


அது, தலிபான் ஆட் சியை உடைத்தது. இதன் விளைவாக, ஒசாமா பின் லேடன் 2011 இல் கொல்லப் பட்டார். (நி-5)

## சர்வதேச சட்டதிட்டங்களை சீனா மதித்து நடக்க வேண்டும்
### ஜோ பைடன் எடுத்துரைப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச சட்டதிட்டங் களை சீனா மதித்து நடந்து கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற பின் னர் நேற்று முன்தினம் விமா னம் மூலமாக வியட்நா மின் ஹனோய் நகருக்கு சென்றார் ஜோ பைடன்.



அங்கு கூடியிருந்த செய்தி யாளர்களிடம் பேசிய அமெ ரிக்க ஜனாதிபதி வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விவகா ரங்களில் சீனா சட்டதிட் டங்களை மாற்றியமைக்க முயற்சித்து வருவதாக குற் றம் சாட்டினார்.

அத்துடன் சீனாவில் அரசு அதிகாரிகள் யாரும் அமெ ரிக்க தயாரிப்பு செல்போனை இனி பயன்படுத்த முடியாது இதைப்பற்றித்தான் பேச விரும்புகிறோம் என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

சீனாவை தனிமைப்ப டுத்துவதற்காக குவாட் அமைப் பில் பங்கேற்கவில்லை. பொரு ளாதார ரீதியாக சீனா வளர் ச்சி பெறட்டும் என்றும் பிராந் திய அமைதிதான் தமது நோக் கம் என்றும் ஜோ பைடன் மேலும் தெரிவித்தார்.(நி-5)

## ாவில் படகு கவிழ்ந்ததில்
## கள் உட்பட 26 பேர் பலி

கள், குழந்தைகள் உட்பட 100 இற்கும் மேற்பட்டோர் படகில் பயணம் செய்தனர். அந்த நேரத் தில் இவ் விபத்து நடைபெற்றது.

உயிரிழந்த 26 பேரில் பெரும் பாலானவர்கள் பெண்கள் மற் றும் குழந்தைகள் அத்துடன் 30 இற்கும் மேற்பட்டோர் மீட்கப் பட்டனர். அதேவேளை ஜூலை மாதம் நைஜர் மாநிலத்தன் தொலை தூரப் பகுதியில் அதிக சுமை ஏற்றப்பட்ட படகு கவிழ்ந்ததில் 100 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. இது சமீபத்திய ஆண்டுகளில் இது போன்ற மோசமான பேரழிவு களில் ஒன்றாகும். (நி-5)

## சூடானில் ஆளில்லா விமானத் தாக்குதல் 40 இற்கும் அதிகமானோர் உயிரிழப்பு

(கார்டோம்)

சூடான் தலைநகர் கார் டோமில் இராணுவத்தினர் துணை இராணுவத்தினரை எதிர்த்து ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியுள்ள னர்.

குறித்த ஆளில்லா விமா [illegible] சந்தைப் பகுதியில் வீழ்ந்த தில் சுமார் 40 இற்கும் அதிகமான மக்கள் உயிரி ழந்துள்ளனர். அத்துடன், 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின் றனர்.

சூடானில் இராணுவ ஆட்சி இடம்பெறுகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத் தினர் யுத்தம் நடத்தி வரு கின்றனர். இதனால் இரு தரப்புக்கும் இடையே இடம் பெற்று வரும் உள்நாட்டு யுத் தம்காரணமாக ஆயிரக்கணக் கானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் வறட்சியால் கருகும் தென்னைகள்

(கண்டாவளை)

**தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் குளம் போன்ற பகுதிகளில் தெங்குப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**



அதிக வறட்சியின் காரணமாக தென்னை மரங்கள் கருகி அழிவடைந்து வருவதுடன் இளநீர், குரும்பை என்பனவும் நீரின்றி காய்ந்து கருகி விழுகின்ற நிலை காணப்படுகிறது. இதனை வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்நிலைகள் வற்றி காணப்படுவதனால் தென்னையுடன் வாழை, பப்பாசி போன்ற பயிர்களும் அழிவடைந்து காணப்படுகின்றன. (நி-6-315)

# உரிமை கோரப்படாத வாகன இலக்கத்தகடுகளை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்வாகன போக்குவரத்து தலைமை அலுவலகத்திலிருந்து 2023.01.01 ஆம் திகதி முதல் 2023.06.30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்கள யாழ்ப்பாண அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளில், வாகன உரிமையாளர்களால் இதுவரை பெற்றுக்கொள்ளப்படாதுள்ள இலக்கத்தகடுகள் 2023 ஒக்டோபர் மாதம் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பப்படவுள்ளன.

மேற்படி வாகன இலக்கத்தகடுகளை, வாகன உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை, பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட மோட்டார்வாகன போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என யாழ்.அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (நி-6)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள கட்டட நிர்மாணத்துறை கணனி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழினுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துனர் ஆகிய கற்கைநெறிகளுக்கான போதனாசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல், மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.கியூ -5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையின் என்.வி.கியூ -4 உடன் குறைந்தது 2 வருடம் கற்பித்தல் அனுபவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் முழு நேர டிப்ளோமா சான்றிதழ் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டச் சான்றிதழ் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழிற்றுறை அனுபவம் காணப்பட வேண்டும்.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது நேரில் சமர்ப்பிக்குமாறு இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாண உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# அகழ்வுப் பணிகளை பார்வையிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம் பிக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில் ஐந்தாம் நாள் அகழ்வாய்வுகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன் னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவை யாளர் ஆகியோரின் பங்கேற்புட்ன், தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ தலைமை யிலான குழுவினரால் முன் னெடுக்கப்பட்டது. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவ ஞானம் சிறீதரன், கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் கட்சி உறுப்பினர் களும் குறித்த அகழ்வுப் பணியை பார்வையிட்டனர். (6-299)

# யாழில் இடம்பெற்ற பூப்பந்தாட்ட பயிற்சி முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பூப்பந் தாட்ட பயிற்சியாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகா மொன்று கடந்த 9, 10 ஆம் திகதிகளில் யாழ். கொக்குவில் பகுதியில் உள்ள யெப்னா போலிங் சென்ரரில் குறித்த பயிற்சி முகாம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரை யாளருமான எஸ்.சபாநாத் இலங்கை பூப்பந்தாட்ட சங்கத் தின் பயிற்சியாளர்களுக்கான அபிவிருத்தி குழு தலைவர் புத்திக்க டி சில்வா, இலங்கை பூப்பந்தாட்ட சங்கத் தின் பயிற் சியாளர் கே.எஸ்.புஷ்பகுமார ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு பயிற்சியில் கலந்து கொண்டவர் களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (6-33)

# விஷமிகளால் வைக்கப்பட்ட தீ பெறுமதிமிக்க மரங்களை நாசமாக்கியது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி பாடசாலை வளாக பின்புறத்தில் நேற்று முன் தினம் விஷமிகளால் தீவைக்கப் பட்டதன் காரணமாக பெறுமதி மிக்க பல மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.




பாரிய தீ விபத்தில் இருந்து பாடசாலை பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர், பொலிஸார் மற்றும் கரைச்சிபிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயினை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் தெரிவிக்கையில் தொடர்ச்சியாக பல பகுதிகளில் தீ விபத்து இடம்பெற்றுவரும் நிலையில் மக்கள் பொது இடங்களில் தீ வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தற்பொழுது வெப்பமும் காற்றும் அதிகரித்து காணப்படுவதால் மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும்எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்



(கொழும்பு)

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரையிலான காலப்பகுதியில் 9 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1 லட்சத்து 36 ஆயிரத்து 405 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன் இம்மாதம் கடந்த 6 நாட்களில் மாத்திரம் 22 ஆயிரத்து 896 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (நி-5)

# உயர்கிறது ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 327.60 ரூபாவாகவும் கொள்வனவு விலை 316.29 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 242.22 ரூபாவாகவும், கொள்வனவு விலை 230.71 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 353.41 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 337.48 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம் ஸ்டேர்லிங் பவுண்டின் நேற்றைய விற்பனை பெறுமதி 411.21 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 393.92 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

# செப்டெம்பர் முதல் 10 நாட்களில் 900 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தகவலின்படி செப்டெம்பர் முதல் 10 நாட்களில் கிட்டத்தட்ட 900 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகி உள்ளனர்.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக குறைந்துள்ள போதிலும் தற்போது நிலவும் சீரற்ற கால நிலையால் டெங்கு நுளம்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தலைவர் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், செப்டெம்பர் மாதத்தில் பதிவான புதிய நோயாளர்களில் கிட்டத்தட்ட 50 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 500 |
| தக்காளி | 200 | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 160 | 140 | 200 | 200 |
| கரட் | 350 | 300 | 300 | 350 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 180 | 180 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 200 |
| பீற்றூட் | 200 | 120 | 130 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 350 | 400 | 380 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 800 | 800 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 400 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 30 | 80 |
| ஈரப்பலா | 80 | 80 | 100 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2911

### வருண்

டேய் தகப்பா, கொஞ்சம் கூட இரக்கமில்லாம என்னை ஸ்கூல்ல விட்டுட்டு போறியா?



நீ அம்மா கையால அடி வாங்கியே சாவுடா தகப்பா... என் பாவம் உன்னை சும்மா விடாது...

### சாலினி

"கடனா ஆயிரம் ரூபா கொடுங்க"



" தப்பா நினைக்காதீங்க... கடன் கொடுத்தா நமது நட்பு கெட்டுவிடும்"

"அப்படி எல்லாம் இல்லிங்க... திருப்பி கேட்டாதான் நட்பு கெடும்"

### முருகேசன்

அடுத்த மாசம் புதுசா ஒரு சட்டம் போட போறாங்க...
அழகா இருக்கிறவங்க எல்லாம் வரி காட்டணும்னு..
நீங்க எல்லாம் தப்பிச்சிருவீங்க...
நான் தான் எத்தனை கோடி கட்ட வேண்டியது வருமோ தெரியல☺



### கிருபா

நான் தேனி மாவட்டம் கம்பத்தில் இருந்து பேசுறன்...



சரிங்க... விழுந்திராதீங்க... கீழ இறங்கி வந்து பேசுங்க...

### சர்மிளா

எப்பவும் உன் நினைப்பாவே இருக்குடா...



ஏங்க திடீர்னு என்னாச்சு உங்களுக்கு

ஐயையோ!! தெரியாம பொண்டாட்டிக்கு call பண்ணிட்டோமே

### மிதுளா

" நீ என்ன சோப் யூஸ் பண்றாய்?"

"கோபால் சோப், கோபால் டூத்பேஸ்ட், கோபால் பனியன்,

போதும்... போதும்... கோபால் பெரிய மல்ட்டி பெரிய மல்ட்டிநேஷனல் கம்பெனியா,

"இல்ல... கோபால் என் ரூம் மேட்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

280





ஆ! அவனுடைய அரைத் துணிச் சுருள்தான்! மிக்க ஆவலுடன் அதை எடுத்துச் சுருளைப் பிரித்துப் பார்த்தான். ஓலை, பொற்காசுகள் எல்லாம் பத்திரமாயிருந்தன! "பணம் பத்திரமாயிருக்கிறதா?" என்று ஒரு குரல் மேலேயிருந்து வந்தது. வந்தியத்தேவன் அண்ணாந்து பார்த்தான். பூங்குழலி மரக்கிளையில் உட்கார்ந்திருந்தாள்.

வியர்த்து விறுவிறுத்துப் போயிருந்த வந்தியத் தேவன் தன்னை மீறிய கோபத்தினால், "உன்னைப் போன்ற மந்தியை நான் பார்த்ததேயில்லை!" என்றான்.

"உன்னைப் போன்ற ஆந்தையை நான் பார்த்ததில்லை அம்மம்மா! என்ன முழிமுழித்தாய்?" என்றாள் பூங்குழலி.

"எதற்காக இப்படி என்னை அலைக்கழித்தாய்? உனக்குப் பணம் வேண்டு மென்றால்"

"சீச்சீ! உன் பணம் இங்கே யாருக்கு வேண்டும்?"

"அப்படியானால், எதற்காக இதைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாய்?"

"அவ்விதம் நான் செய்திராவிட்டால் நீ காட்டுக்குள் வந்திருக்க மாட்டாய். எங்கள் வீட்டுக்கு திரும்பிப் போயிருப்பாய்!"

"போயிருந்தால் என்ன?"

"இந்த மரத்தின் மேல் ஏறிப்பார் தெரியும்!"

"என்ன தெரியும்?"

"பத்துப் பதினைந்து குதிரைகள் தெரியும்! வாள்களும், வேல்களும் மின்னுவது தெரியும்!"

அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து அவள் கூறுவது உண்மையாயிருக்கலாம் என்று தோன்றியது. ஆயினும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பி வந்தியத்தேவன் மரத்தின் மேல் ஏறினான். ஏறுவதற்கு முன் அரைச் சுற்றுச் சுருளைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டான்.

ஒருவேளை இவள் மரத்தின் மேலிருந்து அதைத் தவறிப் போட்டிருக்கலாம். இப்போது மறுபடியும் அதை அபகரிப்பதற்குச் சூழ்ச்சி செய்கிறாளோ என்னமோ யார் கண்டது?

மரத்தின் மேலேறிக் கலங்கரை விளக்கின் பக்கம் நோக்கினான். 'ஆம் பூங்குழலி கூறியதும் உண்மைதான்' அங்கே பத்துப் பதினைந்து குதிரைகள் நின்றன. குதிரைகள் மீது வாள்களும், வேல்களும் பிடித்த வீரர்கள் இருந்தார்கள்.

'அவர்கள் யாராக இருக்கும்? நம்மைப் பிடிப்பதற்கு வந்த பழுவேட்டரையரின் ஆட்கள்தான்! வேறு யாராயிருக்க முடியும்?'

பூங்குழலி தன்னைப் பெரும் அபாயத்திலிருந்து காப்பாற்றினாள், எதற்காக? என்ன நோக்கம் பற்றி? இன்னும் சில விடயங்களும் தெளிவாகவில்லை!

இருவரும் மரத்திலிருந்து கீழே இறங்கினார்கள். "பூங்குழலி என்னைப் பேராபத்திலிருந்து காப்பாற்றினாய். உனக்கு மிக மிக நன்றி!" என்றான் வந்தியத்தேவன்.

"வெறும் பொய்! ஆண்பிள்ளைகளுக்கு நன்றிகூட உண்டா?" என்றாள் பூங்குழலி.

"எல்லா ஆண்பிள்ளைகளையும் போல் என்னையும் எண்ணி விடாதே!"

"நீ எல்லோரையும் போல் இல்லை ஒரு தனி மாதிரி தான்?"

"பெண்ணே! உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"தாராளமாகக் கேட்கலாம் மறுமொழி கூறுவது என் இஷ்டம்."

"என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏன் எண்ணினாய்? என் பேரில் திடீரென்று தயவு பிறக்கக் காரணம் என்ன?"

பூங்குழலி சும்மா இருந்தாள். அவள் சிறிது திகைத்துப் போனாள் என்பது முகத்திலிருந்து தெரிந்தது.

அப்புறம் யோசித்துப் பார்த்து, "அசடுகளைக் கண்டால் எனக்கு எப்போதும் கொஞ்சம் பரிதாபம் உண்டு" என்றாள்.

"சந்தோஷம் இந்த வீரர்கள் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்தாய்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நல்ல கரடியும் தந்திர நரியும்!

ஒரு அழகான காடு. அங்க விலங்கினங்களும் பறவையினங்களும் சந்தோசமா வாழ்ந்து கொண்டு இருந்தன. ஒரு இடத்துல நல்லவர்கள் இருந்தாங்கன்னா கண்டிப்பா தீய எண்ணம் படைச்சவங்களும் இருப்பாங்க இல்லையா.



அந்த காட்டுல பெரும்பாலான உயிரினங்கள் நல்லகுணம் கொண்டவைகளாக இருந்தன. அதிலும் ஒரு கரடி மிகவும் நல்ல குணம் கொண்டது. நம்மோட இருக்கும் உயிரினங்கள் நமக்கு சகோதரர்கள் என்று அனைவரிடமும் அன்பாக பழகும்.

அதனால் இந்த கரடியை எல்லா உயிரினங்களுக்கும் பிடிக்கும். குறிப்பாக ஒரு நரி அந்த கரடிக்கு நண்புனாக இருந்துச்சு. ஆனா நரியின் குணம் கரடிக்கு நேர்மாறு. தீயவழியில என்னென்னலாம் செய்யலாம் என்று யோசிக்கும். மற்றவர்கள் உழைப்பை திருடும். பசியில சில அப்பாவி உயிரினங்களையும் சாப்பிடும். இதனால் மற்ற உயிரினங்கள் நரியின் மேல் எரிச்சலாய் இருந்தன. எப்போ அந்த நரியை காட்டை விட்டு விரட்டுவோம் என்று யோசித்துக்கொண்டு இருந்தன.

அதற்கு தடையாக இருந்தது நம்ம கரடி தான். யாரிடம் எப்படி இருந்தாலும் நரி கரடியிடம் இதுவரைக்கும் ஒரு நல்ல நண்பனாய் இருந்துச்சு. அதனால் கரடி மற்றவர்கள் சொல்லுக்கு காது கொடுக்கவில்லை.

கரடியிடம் ஒரு அழகிய குட்டிமயில் நட்பாக இருந்துச்சு. அது கரடியிடம், "கரடி மாமா, உங்க நண்பன் நரி வரவர எல்லாருக்கும் அதிகபடியாக கஷ்டங்கள் தருது.

எங்களால பொறுக்க முடில. எல்லாரும் சேர்ந்து அந்த நரியை விரட்ட முடிவு செய்திருக்கிறோம்." என்றது. கரடி அதற்கு, "தம்பி, எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்க. நரி நல்லவன் தான். நான் பேசிப் பாக்கிறேன். நரி புரிஞ்சுக்கும்" என்றது.

"தயவு செய்து மாமா". நரி மாறல. நீங்களும் ஒப்புகொள்ளல என்றால் நாங்களே வேற காட்டுக்கு போய் விடுவோம் என்றது மயில் சோகமாக. அதற்கு கரடியோ, "யாரும் போக வேண்டாம். எல்லாம் சரி ஆகும்" என்றது. மயில் விடை பெற்றது.

கரடிக்கு கவலை அதிகமானது. நரியை சொல்லி திருத்துவதை விட, செயலில் திருத்த கரடி முடிவு செய்தது. அதேநாள் நரி கரடியை பார்க்க வந்துச்சு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்திரன், சூரியன், பூமி எங்கும் இந்தியாவின் புகழ் ஓங்குகிறது

இந்தியாவில் நடைபெறும் ஜி–20 மாநாடு பாரத பூமியின் அபரிதமான வளர்ச்சியின் அடுத்த கட்டப் பரிணாமம் எனலாம்.

ஏலவே சந்திரயான்–3 சந்திரனின் தென் பகுதியில் கால் பதித்து உலகை வியப்பில் ஆழ்த்தியிருக்க,

சூரியனை ஆய்வு செய்யும் பணியில் ஆதித்தியா விண்கலம் வானவெளியில் சஞ்சரிக்க, பாரத பூமியில் ஜி–20 மாநாட்டை ஒட்டி உலகத் தலைவர்கள் இந்திய தேசத்தில் தங்கியிருக்கின்றனர்.

ஆக சந்திரன், சூரியன், பூமி என எங்கும் இந்திய தேசத்தின் பெரும் புகழ் வியாபகம் பெற்றுள்ளது.

இதில் ஜி–20 மாநாட்டையொட்டி இரண்டு அற்புதங்கள் நடந்தாகியுள்ளன.

அதில் ஒன்று ஜி–20 மாநாடு நடைபெறுகின்ற இந்திய தேசத்தின் தலைநகர் புதுடில்லியில் உள்ள மிகப் பிரமாண்டமான மாநாட்டு மண்டபத்தின் முன்பாக 27 அடி உயரமான நடராஜர் சிலை ஸ்தாபிக்கப்பட்டமையாகும்.

ஆம், உலகில் மிக உயர்ந்தது என்று கூறக்கூடிய நடராஜர் சிலையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜி–20 மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாகப் பிரதிஷ்டை செய்துள்ளார்.

27 அடி உயரமும் 18 தொன் எடையும் கொண்ட குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய் குமின் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு, இனித்தமுடைய எடுத்த பாதம் என அருட்பெரும் சோதியான ஆடும் நடராஜப் பெருமானின் திருப்பெருவடிவம் ஜி–20 மாநாட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதன் மூலம் நடராஜர் வடிவத்தின் தத்துவம் உலகுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

அதிலும் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் நடராஜர் சிலை அமையப் பெற்றமை பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

இதுதவிர, ஜி–20 மாநாடு சார்ந்து இடம்பெற்ற மற்றைய நிகழ்வு உலகத் தலைவர்கள் கதர் அணிந்து வெறுங்காலுடன் நடந்து அண்ணல் மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியமையாகும்.

என்னே! அற்புதம். ஒரு காலத்தில் காந்தியடிகளின் கதர் ஆடை கண்டு ஏளனம் செய்த நாடுகள் இப்போது அண்ணல் காந்தி இந்த உலகின் மகாத்மா என்பதை ஏற்று, அவரைக் கௌரவித்து தாமும் கதர் அணிந்து வழிபாட்டுத் தலமாகக் கருதி பாதணி இன்றி வெறுங்காலுடன் சென்று காந்தியடிகளின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியமை இந்திய தேசத்துக்கு உலகம் தலைவணங்குகிறது என்ற மெய்மை சின் முத்திரையாக உணர்த்தப்பட்டுள்ளது.

ஆக, பிரதமர் நரேந்திர மோடி இந்திய தேசத்தை ஆன்மீக பூமியாக, இந்து தர்மத்தின் இருப்பிடமாக, ஞானிகளும் யோகிகளும் வாழ்ந்த – வாழுகின்ற ஞானபூமியாக உலகப் பந்தில் உயர்த்தி வைத்துள்ளார் என்பதை இவ் அகிலம் ஏற்றுக் கொள்ளும்.

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம்

# ஊடகங்களுக்கு புதிய பல கட்டுப்பாடுகளால் கண்துடைப்பு சம்பவங்கள் அரங்கேறவும் வாய்ப்பு?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்றும் ஐந்தாம் நாளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. குறித்த அகழ்வாய்வின் போது நான்கு மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த அகழ்வு பணியில் இடம்பெற்ற தவறுகளை சுட்டிக்காட்டியதன் பொருட்டு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் ஊடகங்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது ஊடகவியலாளர்கள் அகழ்வுப்பணி காலை ஆரம்பிக்கும் போதும், மதிய உணவு நேரம், மாலை நிறைவடையும் போதே அருகில் சென்று வீடியோ, புகைப்படங்கள் எடுத்து செய்தி சேகரிக்க முடியும் எனவும் ஏனைய நேரங்களில் செய்தி சேகரிக்க அனுமதி இல்லை எனவும் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ கட்டுப்பாடு விதித்துள்ளார்.

குறித்த அகழ்வுப் பணி பற்றிய விடையங்கள் ஏற்கனவே ஊடகங்களுக்கு மறைக்கப்பட்டு வரும் நிலையில் திடீரென இவ்வாறு ஊடகங்களுக்கு பிறப்பிக்கப்பட்ட புதிய கட்டுப்பாட்டில் குறித்த இடத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களை மூடி மறைப்பதற்கான செயற்பாடாகவே இருக்கின்றது என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இனிவரும் அகழ்வு பணிகளில் உண்மையான விடயங்களை ஊடகங்களுக்கு வழங்குவார்களா? மக்களுக்கு உண்மையான விடயங்கள் தெரியவருமா? அல்லது மூடி மறைக்கப்படுமா? என்ற கேள்வியே மக்கள் மத்தியிலும், ஊடகவியலாளர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. (ம-7)

# சனல் 4 கூறுவது மெய்யல்ல பொய்யெனவும் கொள்ள முடியாது

## சர்வதேச விசாரணையே தீர்வு – ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சனல் 4 கூறுவது எல்லாம் உண்மையான விடயங்களாகக் கருத முடியாது எனபாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சனல் 4 கூறுவது எல்லாம் உண்மை எனக் கூற முடியாது. ஆனால் இவற்றை அப்படியே விடவும் முடியாது.

விசாரணை ஒன்று நடத்த வேண்டும். அரசாங்கம் தற்போது ஓய்வு பெற்ற நீதிபதி ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

உண்மைகள் முதலில் கண்டறியப்பட வேண்டும். யாரையும் காப்பாற்றவோ அல்லது யாரையும் பிரச்சினைகள் தள்ளவோ அன்றி, நேர்மையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முழுமையான அறிக்கைகள் பாராளுமன்றுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

இனியும் இவற்றை மூடி மறைத்துக் கொண்டிருக்கக்கூடாது. சர்வதேச விசாரணை ஊடாக உண்மைகள் வெளிவருவது தான் அனைவருக்கும் நன்மையாக அமையும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மனைவியை கொலை செய்த இலங்கையர் கைது

## சிங்கப்பூரில் சம்பவம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் தனது மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயது மதிக்கத்தக்க இலங்கையரான ஈஷான் தாரக என்பவர் தனது மனைவி தியவின்னகே செவ்வந்தி மதுகா குமாரியை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த செப்டம்பர் 9 ஆம் திகதி காலை 10.45 மணிமுதல் மாலை 4.42 மணிவரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாக சிங்கப்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

88 ஈஸ்ட் கோஸ்ட் வீதியில் அமைந்துள்ள Holiday Inn Express Katong எனும் ஹோட்டலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், இந்தக் கொலைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள குறித்த நபர், ஒரு வாரம் பொலிஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் மீண்டும் செப்டம்பர் 18 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவார் என கூறப்பட்டுள்ளது.

குறித்த, ஹோட்டல் அறையில் கைது செய்யப்பட்டவரின் மனைவி, கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட வெட்டுக் காயத்துடன் உயிரிழந்த நிலையில் கிடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# ரயில் சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களினால் நேற்று முன்னெடுக்கப்பட்ட திடீர் பணிப் புறக்கணிப்பு போராட்டம், அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

ரயில் சேவையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பல மாதங்களாக ஊக்கத்தொகை வழங்கப்படாததால், நேற்றுக் காலை ரயில்வே தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதற்கிணங்க, நேற்று காலை 10.40 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து கண்டி நோக்கி பயணிக்க ஆரம்பிக்கும் டிக்கிரி மெனிகே புகையிரதம் உட்பட 10 மணிக்கு பின்னர் இயக்கப்படவிருந்த ஆறு பிரதான புகையிரத பயணங்களை புகையிரத திணைக்களம் இரத்துச் செய்ய வேண்டியிருந்தது.

காலை மற்றும் மதியம் இயக்கப்பட்ட ரயில்கள் காலதாமதமாக இயக்கப்பட்டதால், ரயில்வே பொது மேலாளருடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தைக்கு பின்னர், எதிர்வரும் 25 ஆம் திகதி ஊக்கத்தொகை வழங்கப்படும் என உறுதியளித்ததன் பேரில், நேற்று மதியம் 2.30 மணியளவில் தொழிற்சங்க போராட்டத்தை கைவிட ஊழியர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், குறித்த போராட்டம் காரணமாக மாலை நேர ரயில் இயக்கத்தில் பாரிய பாதிப்பு ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம், அம்பகாமம் மொபிடல் கோபுரம், டயலொக் கோபுரம்-ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம்வேலி வயல் வீதி, பெரிய புளியங்குளம் (தட்சை அடம்பன்), புலிமைச்சினாதிகுளம், புதிய நகர் (தட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்டமுறிப்பு) ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மகாறம்பைக்குளம், மலையா பருத்திக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

30



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

முன்னைய காலத்தில் கடன் வழங்கும் நாடுகளுக்கு இரண்டு அடிப்படைகள் இருந்தன. முதலாவது அந்த நாடு தன்னுடைய சொந்த வளங்களைப் பயன்படுத்தி அந்தக் கடனை திருப்பிச் செலுத்துமா என்பது. இரண்டாவது முக்கியமாக அந்தக் கடன் முதிர்ச்சியடைந்து திருப்பிச் செலுத்த வேண்டிய நாளில் வங்கிக்கு அந்த கொடுப்பனவை மேற்கொள்வதில் அந்த நாட்டுக்கு ஏதும் சிக்கல்/கஷ்டம் இருக்குமா என்பது. எதிர்காலத்தில் ஒரு நாள் அந்த நாடு தனக்கு ஏற்புடைய வட்டி வீதத்தில் இன்னுமொரு இடத்தில் இருந்து கடன் வாங்கி தன்னிடம் வாங்கிய கடனை மீளச் செலுத்தும் என்ற நிச்சயமற்ற தன்மையை எந்த ஒரு வங்கி மேற்பார்வைக் குழுவும் அந்தக் காலத்தில் ஏற்றுக் கொள்ள வில்லை.

எனவே ஒரு நாட்டின் கடன் கோரிக்கைக்கு வங்கி மேற்பார்வைக் குழுவின் பதில் பலவாறாக இருக்கும். வழக்கமாக அவர்களின் பதில் ஒரு தவணைக் கட்டண கடன் ஆக இருக்கும். அதாவது ஒரு கால வரையறுக்கு உட்பட்ட (உதாரணமாக 10 வருடம்) கடன், ஆனால் கடனாளி குறிப்பிட்ட தவணை இடைவெளிகளில் கட்டாயமாக கடனின் முதலை (உதாரணமாக கடைசி 5 வருடங்களில்) பகுதி பகுதியாக கட்டி முடிக்க வேண்டும். அப்படி செய்யும் போது கடன் முதிர்வடையும் நாளில் அதிலிருந்து மீள்வதற்கு கொடுப்பனவை செய்வது அந் நாட்டிற்கு பெரும் சிரமமாக இருக்காது.

முன்னைய காலத்தில் அப்படியிருந்தாலும் இப்பொழுது அப்படியில்லை. இன்றைய உலகில் நாடுகள் முதன்மையாக முறிகளின் சந்தைகளிலிருந்தே (bond markets) கடன்களை பெறுகின்றன. இந்தச் சந்தைகள் சடுதியான கடன் முதிர்வுகளையே விரும்புகின்றன. அதாவது எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பத்திரத்தின் முழுத் தொகையையும் திருப்பிச் செலுத்துவதாகும். எனவே இந்த கடன்கள் மறுகடனெடுத்தலூடாக தீர்க்கப்படும் என்ற அனுமானத்தில் தான் நாம் அனைவரும் இந்த நாட்களில் செயற்படுகிறோம்.

40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட மூலதனச் சந்தைகள் மிகப் பெரியதாக இருப்பதால், கடன்பட்ட நாடு மூலதனச் சந்தையிலிருந்து மறுகடனெடுக்க முடியும் என்று கூறுவது இப்போது முற்றிலும் நம்பத்தகுந்ததாக உள்ளது.

உங்கள் நாட்டிற்காக நீங்கள் கடன் வாங்கப் போகிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் ஒரு வெளி நாட்டு நாணயத்தில், அநேகமாக அமெரிக்க டொலரில், ஒருங்கிணைக்கப்பட்ட LIBOR (London Inter Bank Offered Rate) வட்டி வீத அடிப்படையிலான கடன் ஒப்பந்தத்தின் மூலம் கடன் வாங்கப் போகிறீர்கள் என்று அர்த்தம். இன்று நீங்கள் எந்த நாணயத்திலும் கடன் வாங்கலாம். அதை நீங்கள் விரும்பும் நாணயத்திற்கு மாற்றலாம். நீங்கள் நிலையான வட்டி வீதத்துக்கு கடன் வாங்கலாம். அதை மாறும் வட்டி வீதக் கடனாக மாற்றலாம். அதாவது இன்று மூலதனச் சந்தைகள் பரந்தும் மிகப் பெரிதாகவும் பல்வகைப் பட்டதாகவும் உள்ளன.

இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால், மறுகடனெடுத்தல் அனுமானம் சில சந்தர்ப்பங்களில் உடைந்து போகக் கூடியது. சில சமயங்களில், நாட்டின் தவறான பொருளாதார நிர்வாகம் காரணமாக முதலீட்டுச் சந்தைகள் அந்நாட்டுக்கு கடன் வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றன. மேலும் சில சமயங்களில் அது கடன் வாங்கிய நாட்டின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களாகவும் இருக்கும். நாடு எதிர்பாராத புவிசார் அரசியல் நெருக்கடியை சந்திக்கலாம். உலக மூலதனச் சந்தையில் உள்ள பெரியதொரு நிதி நிறுவனம் உடைந்து போகலாம். வளர்ந்த நாடுகளில் வட்டி விகிதங்கள் உயர ஆரம்பிக்கலாம். இது 1994இல் நடந்தது. அந்த ஆண்டில் அமெரிக்க மத்திய வங்கி 11 முறை வட்டி வீதத்தை உயர்த்தியது. இதனால் வளர்ந்து வரும் சந்தைகளில் பணத்தை முதலீடு செய்தவர்கள் அப்போது பாதுகாப்பான லாபகரமான முதலீடு என்று அவர்கள் கருதி அமெரிக்காவுக்கு அப்பணத்தை பெருவாரியாக இடம் மாற்றினார்கள். இது மற்றைய நாடுகளில் நெருக்கடிகளை உருவாக்கின.

பிணைமுறிக் கடனாளி நாடு ஒன்றின் துரதிர்ஷ்டம் அல்லது அதன் முறைகேடான பொருளாதாரப் போக்கு முதலீட்டாளர்களுக்கு பிணைமுறிக் கடன் அளிப்பதில் அபாயங்கள் இருப்பதை நினைவூட்டுகிறது. திடீரென்று அவர்கள் பின் வாங்கத் தொடங்குகிறார்கள். ஒரு சமூகமாக நாம் இந்த ஸ்திரமின்மையை பிணைமுறி நிதிச் சந்தைக்குள் அனுமதித்து விட்டோம். இப்போது நம்மிடம் நிதி அமைப்பு உலகத்தின் அரசியல் கட்டமைப்பு, நிதிக் கட்டமைப்பு இன்னும் சொல்லப் போனால் இயற்கையின் கட்டமைப்பு என்பவை நிரந்தரமாக எமக்கு சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையின் மீது கட்டப்பட்டுள்ளது.

மறுகடனெடுத்தல் இந்த நாட்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுமானமாக இருக்கிறது. ஆனால் எந்த காரணத்திற்காகவாவது ஒரு நாடு அதன் முதிர்ச்சியடைந்த கடனை தீர்க்க மறுகடனெடுத்தல் செய்ய முடியாது என்ற கட்டம் வரும் போது பிரச்சினை வருகிறது. அந்த நேரத்தில் அந்நாட்டுக்கு இருக்கும் தேர்வுகள் மிகவும் கொடூரமானவை.

ஒரு தேர்வு என்னவென்றால் எந்தவிதமான அவமானத்தையோ சங்கடத்தையோ வெளியே காட்டாது பிரச்சினையை தீர்க்க முனைவது. அதாவது நாட்டின் நிதிக் கையிருப்புகளைப் பயன்படுத்தி நிதிச் சந்தையில் ஏற்பட்ட இடர் காலத்தை கடப்பது. இது எப்போதுமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு மோசமான யோசனை. பெரும்பாலான நாடுகளின் கையிருப்புகள் சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் மட்டுமே நீடிக்கும்.

உதாரணமாக உலகின் மிகப் பெரிய பிணைமுறிக் கடனாளியான அமெரிக்கா எல்லா கடன் சந்தையிலிருந்தும் முற்றிலும் துண்டிக்கப்படுமாக இருந்தால் கடனைச் செலுத்துவதற்கும் அதன் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிரப்புவதற்கும் சுமார் 17 வாரங்கள் மட்டுமே அதன் கையிருப்பு போதுமானது. என்னுடைய (லீ புக்ஹைட்டின்) நண்பர் ஒருவர் சில வருடங்களுக்கு முன்பு செய்த ஒரு சிறிய ஆய்வில் இது தெரிய வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க காங்கிரஸ் அமெரிக்க அரசாங்கத்திற்கான கடன் உச்சவரம்பை அதிகரிக்கத் தடை விதித்து. அப்போது இந்த கணிப்பு கிட்டத்தட்ட சரியானது என்று நிரூபணமானது. அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஏறத்தாழ மூன்று மாதங்களில் தங்களிடமுள்ள பணம் தீர்ந்து விடும். அந்த நேரத்தில் எமக்கு கடனளித்த சிலருக்கு பணம் கொடுக்க முடியாத சூழல் வரும் என்று அமெரிக்க காங்கிரசுக்கு கடிதம் எழுதினார்.

கடனை தீர்க்க மறுகடனெடுத்தல் செய்ய முடியாது என்ற கட்டம் வரும் போது செய்யப்படும் முதலாவது தேர்வு பற்றி பார்த்தோம். இரண்டாவது தேர்வு என்னவென்றால் கடன் வழங்கக்கூடிய அதிகார பூர்வ மூலங்கள் சிலவற்றை முடிந்தால் கண்டு பிடித்து அவர்களிடமிருந்து கடன் வாங்குவதாகும். அந்தக் கடனை முதிர்ச்சியடையும் கடன்களிலிருந்து வெளியேற பயன்படுத்துவதாகும்.

இது தான் ஐரோப்பாவில் 2010 இல் தொடங்கி நடந்தது. ஐரோப்பாவில் இருந்த கொள்கை அதிகார பூர்வ கடன் வழங்கும் மூலங்கள் (ஐரோப்பிய ஒன்றியம் (EU), சர்வதேச நாணய நிதியம் (IMF) என்பனவற்றின் ஊடாக கடன் வாங்குவதாகவே இருந்தது. இந் நிறுவனங்கள் கடனில் அமிழ்ந்திருந்த கிரேக்கம், போர்த்துகல், அயர்லாந்து, சைப்பிரஸ் ஆகிய நாடுகளுக்கு அவர்களின் முதிர்வடையும் கடன்களை கட்டுவதற்காக கடன் வழங்கின. இந்தக் கொள்கையின் விளைவு என்னவென்றால் அந்நாடுகளிற்கு வழங்கிய கடன்களால் வணிக நிதி நிறுவனங்களுக்கு வரவிருந்த இழப்பு அவர்களில் கைகளிலிருந்து இந்த உத்தியோகபூர்வ நிதி மூலங்களின் தோள்களிற்கு மாற்றப்பட்டது. அதாவது அந்த கடன் பொறுப்புகள் இந்த அதிகாரபூர்வ நிதி மூலங்களுக்கு வரி செலுத்துவோரின் கைகளுக்கு மாற்றப்பட்டது.

இந்த அதிகாரபூர்வ நிதி மூலங்களிடமிருந்து கடன் வாங்குவதற்கான வசதியும் ஒரு நாட்டுக்கு இல்லை என்றால், அந்நாட்டுக்கு ஒரே ஒரு தெரிவு மட்டுமே உள்ளது. தனது கடன்களை மறுசீரமைப்பது என்பதே அந்த ஒரே ஒரு தெரிவு. கடந்த 40 ஆண்டுகளில் ஏற்பட்ட பிணைமுறிக் கடன் நெருக்கடிகளின் மூலம் நாம் கற்றுக் கொண்ட ஒரு பாடம் என்னவென்றால் அது அநேகமான நாடுகள் தமது கடனை மறுசீரமைக்கும் முடிவை முடிந்தவரை பிற்போட்டுக் கொண்டே வந்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக 1980களில் நீங்கள் பார்த்தால் கடன் மறுசீரமைப்புக்கு பெரிய உதாரணமாக இருந்தது மெக்சிக்கோ ஆகும். 1982 ஆவணி வரை அதன் கடன் ஊதிப் பெருத்து இருந்தது. அப்பொழுது ஒரு பொருளாதார வல்லுநர் மெக்சிகோவின் கையிருப்பு எதிர்மறையாகிவிட்டது என்று என்னிடம் (லீ புக்ஹைட்டிடம்) சொன்னது நினைவிருக்கிறது. இதன் பொருள் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அது மோசமான நிலைமை என்பது மட்டும் தெரிந்தது.

கடன் ஊதிப் பெருத்திருக்கும் அதேவேளை அக்கடனை கட்ட எங்குமே மீள்கடன்வாங்க முடியாத நிலைமையில், முதலாவதாக வரும் கேள்வி IMF இடம் போகலாமா என்பது. இது குறித்து வலுவான கருத்துக்கள் உள்ளன. நிச்சயமாக IMF ஒரு அளவு நிதியுதவியை வழங்கும். அதற்காக அவர்கள் வரவேற்கப்படுவார்கள். ஆனால் அது ஒருபோதும் சும்மா கிடைக்கப் போவதில்லை. அதற்கு நிபந்தனை இருக்கும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா தீர்மான...

வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 54ஆவது அமர்வின் ஆரம்பத்தில் நேற்று இலங்கையின் நிலைப்பாட்டை முன்னிறுத்தி உரை யாற்றுகையில் அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர் பான திட்டத்தை சந்தேகத்திற்குரிய ஆணை என வர்ணித்துள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறல் திட்டத்திற்கு வழிவகுத்த இரண்டு 46./1 - 51./1 தீர்மானங்களையும் முற்று முழுதாக நிராகரித்துள்ளது என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க விரும்புகின்றேன். எழுத்துமூல அறிக் கைகளையும் முடிவுகளையும் பரிந் துரைகளையும் நாங்கள் நிராகரிக்கின் றோம்.

இந்த தீர்மானங்களில் காணப்படும் உள்ளடக்கங்களை ஏற்றுக் கொள்ளா ததால் பல நாடுகள் இந்த தீர்மானத்தை எதிர்த்தன அல்லது அதில் வாக்களிப் பதை தவிர்த்தன என்பதை நாங்கள் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின் றோம்.

குறிப்பாக ஆதாரங்களை சேகரிக் கும் பொறிமுறையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேயில்லை.ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை உருவாக்கப் பட்டுள்ளமை முன்னொருபோதும் இடம்பெறாத விடயம்.

இது மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங் கிய ஆணைக்கு அப்பால் செல்கின் றது என்பதை இலங்கை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது.

இந்த தீர்மானங்கள் உள்விவ காரங்களில் தலையிடுபவை-சமூகங் களை துருவமயப்படுத்துபவை.

மேலும் இந்த தீர்மானங்களை மனித உரிமைகளிற்கு அப்பாற்பட்ட காரணங்களிற்காகவும் தங்களின் உள்நாட்டு அரசியலுக்காகவும் ஒரு சில நாடுகள் பின்பற்றுகின்றன. இந்த தீர்மானத்தின் நிதிசார்ந்த தாக்கங்கள் குறித்து பல நாடுகள்கேள்வி எழுப்பி யுள்ளன. இது பேரவையினதும் உறுப்புநாடுகளினதும் வளங்கள் மீது பயனற்ற விதத்தில் செலவுகளை உரு வாக்கக்கூடியது என்பதை இலங்கை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந் துள்ளது. இதன் காரணமாக இலங்கை இதற்கு ஒத்துழைப்பு வழங்காது.

எனினும் பல்தரப்பு கட்டமைப்பில் ஆக்கபூர்வமாக பங்கெடுக்கின்றநாடு என்ற அடிப்படையிலும் சர்வதேச சமூ கத்துடனான எங்களின் ஆழமான ஈடு பாட்டை கருத்தில்கொண்டும் இலங்கை பேரவையின் ஏனைய பொறிமுறை களுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை தொடர்ந்தும் பேணும் என்றார். (ம-7)

## பயங்கரவாத...

கூறல் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை நிறுத்துதல் ஆகிய வற்றையும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மேலும் உறுதியான நட வடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 54ஆவது அமர்வு நேற்று ஆரம்பமானவேளை ஐரோப்பிய ஒன் றியம் இலங்கை குறித்த அறிக்கை யொன்றில் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையின் நல்லிணக்க பொறி முறைகளை கருத்தில் எடுத்துள்ள தாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித் துள்ளது.

கடந்த வருடத்தின் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்களை கவ னத்தில் எடுத்துள்ள அதேவேளை கருத் துச் சுதந்திரம் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந் திரம் மற்றும் இலங்கையின் அனை வரினதும் பொருளாதார சமூக கலா சார சுதந்திர உரிமைகள் ஆகியவை உட்பட மனித உரிமைகளை உறுதி செய்வதற்கான அவசியத்தை வலி யுறுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக எடுக்கப் பட்ட சாதகமான நடவடிக்கைகள் நாட் டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வழிவகுத்ததை ஏற்றுக்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் பலவந்தமாக காணா மல் செய்யப்பட்ட பல சம்பவங்களிற்கு தீர்வை காணல் ஆகியவற்றையும் வலியுறுத்தியுள்ளது.

அமைதியான ஒன்றுகூடலிற்கான உரிமையை உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் அமைதியான வழியில் ஆர்ப்பாட்டங் களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக பலத்தை பிரயோகிப்பதை தவிர்க்கு மாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் பயங்கர வாத தடைச்சட்டத்தை பயன்படுத்து வதை அது சர்வதேச சட்டங்கள் தரா தரங்களை முழுமையாக பின்பற்றும் வரை இடைநிறுத்திவைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ள ஐரோப் பிய ஒன்றியம், பொறுப்புக்கூறல் தண் டனையின் பிடியிலிருந்து விலக்களித் தலை நிறுத்துதல் ஆகியவற்றையும் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## ஒன்றின் மீது...

காணப்படுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழி அகழ்வுப்பணிகள் ஐந்தாவது நாளாக நேற்று இடம்பெற்ற நிலை யில், அகழ்வுப் பணிகளின் நிறைவில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கை யிலேயே, இத்தகவலை வெளியிட்டுள் ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இரண்டு மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாகவும், ஒரு மனித எலும் புக்கூட்டுத்தொகுதி பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளதுடன், ஒரு துப்பாக்கி ரவையும் தடயப் பொருளாக எடுக் கப்பட்டுள்ளது.

ஒன்றின் மீது ஒன்று மிக நெரு க்கமாகவும், பல அடுக்குகளாக வும் மனித எலும் புக்கூட்டுத் தொகு திகள் காணப்படு கின்றன. எனவே எத்தனை மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளன என் பதை தற்போது இனங்காண முடியாதுள்ளது.

படிப்படியாக அகழ்வுகளை மேற்கொண்டு, மனித எச்சங் களின் மேலுள்ள மண்ணை அகற் றும்போதுதான் எத்தனை மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் உள் ளன என்பதை இனங்காணமுடி யும். இன்னும் ஓரிரு தினங் களில் எத்தனை எலும்புக் கூட்டுத் தொகுதிகள் இனங்காணப் பட்டுள்ளதென் பதை தெரிவிக்க முடியும்.

அதேவேளை கடந்த செப்ரெம்பர் வெள்ளியன்று இரண்டு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்த நிலை யில், தற்போது மொத்தம் 04 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமை யாகவும், ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி பகுதியளவிலும் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 14 மீற்றர் நீளத்திலும், 3 மீற்றர் அகலத்திலும், 1.5 மீற்றர் தொடக்கம் 2 மீற்றர் வரையான ஆழத் திலும் அகழ்வாய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த செப்ரெம்பர் சனிக்கிழமையன்று விடுதலைப் புலி கள் அமைப்பின் தகடு ஒன்று எடுக் கப் பட்டது. அதுதொடர்பில் பின்னர் அறி யத்தரப்படும் என்றார். (ம-7,299)


மீண்டும் அதிர்ஷ்டம்
நாகபூசணி அதிர்ஷ்ட அலையில் கனகலிங்கம் திலகவதி மூலம் மீண்டும் சசிரி லொத்தரில் (10/09) 200000/=
2 லட்சம்
(17046)

மெகா பவர்
திகதி 11/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1582
I 22 09 12 47 77
51152

தன நிதானய
திகதி - 2023.09.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1264
O 08 49 62 76 O
06517

லக்கி 7
திகதி 11.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0060
L7 இலக்கம் 1 4
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 3 4 5 3 9 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3476
சீட்டிழுப்பு திகதி 11.09.2023
I 01 04 12 30
I 33226

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.11
சீட்டிழுப்பு இலக்கம் 543
விருச்சிகம் 26 27 30 37 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/11
சீட்டிழுப்பு இலக்கம் 5234
G 7 9 4 5 2 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2208 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.11 தினம் திங்கட்கிழமை
10 11 53 58 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,095,748.40
80838 609

சனிதா
திகதி 2023.09.11 வெற்றி வாரம் 4369 வர்ணம் இளம் நீலம்
36 42 45 54 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,092,192.00
58359 496

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3920 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.11 தினம் திங்கட்கிழமை
01 13 34 44 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
53829 272

கப்றுக
திகதி 11.09.2023 வெற்றி வாரம் 1384 வர்ணம் பசுமை
B 29 07 31 35 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 438,578,484.20
78325 892
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.09.11 வெற்றி வாரம் 1955 வர்ணம் செம்மஞ்சள்
04 07 15 32 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,908,395.20
92326 834

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2034
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.09.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,636,616/-
37 38 57 62 O
35613 345


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்...

மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் இடம் பெற்று வரும் நிலையில் இன்றைய தினம் சப்பறத் திருவிழா இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம்வள்ளி, தெய்வானையுடன் முருகப் பெருமான் புதிய சப்பறத்தில் வீதியுலா வரவுள்ளார். (ம-7)

## பரியேறி...

நேற்று மாலை பக்திபூர்வமாக இடம் பெற்றது.

உற்சவத்தில் நல்லூர் வேற்பெருமான் கஜவல்லி மகாவல்லியர் உடன் வர பரி வாகனம்தனில் ஆரோகணித்து திக் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது ஆலய ஆஸ்தான கவி விஸ்வபிரசன்னா குருக்கள் "ஸ்ரீமான் இராஜாதி ராஜன் ஈரேழு லோகங்களின் அதிபதி, நாடாளும் நாயனார் ஆனந்த சித்தன் நல்லூர்ப் பதிக் காவலன் அடியார் காதலன் வேதத்தின் நாயகன், முத்தமிழ் வித்தகன், நல்லூர் கந்தசாமியார் பரியேறி வருகிறார்" என முருகனின் திக் விஜயத்தை உலகறிவித்தமையும் பக்தர்களினை மெய்சிலிர்க்க வைத்தது,

மேலும் பண்டைய தமிழர் வாழ்வியலுடன் தொடர்புடைய பாரம்பரிய இசைக் கருவிகள் இசைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(ம-7)

## புகை...

சங்கம் நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளது.

வேதன உயர்வு, காலதாமதமாக பதவி உயர்வு வழங்கல் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு இடம்பெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பில் உள்ள புகையிரத தரிப்பிட முனையத்தின் பணியாளர்கள் நேற்று மதியம் ஆரம்பித்த திடீர் பணிப்புறக்கணிப்பு கைவிடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## மனித...

சாங்கம் ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை நிராகரித்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ள அவர் உரிய தகவல்கள் ஆதாரங்களை வழங்குவதற்காகவும் உரிய நீதித்துறை மற்றும் ஏனைய செயற்பாடுகளிற்கு ஆதரவை வழங்குவதற்காகவும் தனது அலுவலகம் ஆதாரங்கள் தகவல்களை சேகரிக்கும் பாதுகாக்கும் ஆராயும் நோக்கில் பொறுப்புக்கூறல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

தனது திட்டத்திடமிருந்து தகுதி வாய்ந்த அதிகாரிகள் அதிகளவில் வேண்டுகோள்களை விடுக்கின்றனர் குறிப்பாக பத்துபேர் குறித்த விபரங்களை கோருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# மைத்திரிபால சிறிசேன உண்மையானவரல்ல

### உதய கம்மன்பில

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்க மாட்டார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு நாள் இரவு மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைந்து அப்பம் சாப்பிட்டு விட்டு மறுநாள் காலை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூட மைத்திரிபால சிறிசேன உண்மையாக இருக்கவில்லை என தெரிவித்தார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17032)
076 825 7716 (ஆகாஸ்)

SILVER SHIELD
மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

வேலைவாய்ப்பு
இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் பருத்தித்துறை அச்சுவேலி மற்றும் நெல்லியடி கிளைகளில் வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
O/L மற்றும் A/L களில் மூன்று பாடங்களில் சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்
முடிவுத் திகதி -19/09/2023 (17043)
077 803 9320, 075 269 0188

DAY CLASS
பகல் வகுப்புக்கள்
A/L -2023
கணக்கீடு D.Sam
தினந்தோறும் காலை 8-1 வரை
பொருளியல் K.R உதயன்
DMI JAFFNA
வணிகம் பசில் கெசோன்
Day Class நடைபெறும் ஒரே நிறுவனம் (17044)
077 848 0604

உங்கள் வியாபர திட்டங்களுக்கு முதல் படி
உங்களின் வித்தியாசமான வியாபார சிந்தனைகளை ஒரு startup ஆக உருவாக்க விரும்புகிறீர்களா?
உங்கள் வியாபாரத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு உத்தேசித்து உள்ளீர்களா?
உங்கள் அனைவருக்கும் ஏற்ற ஒரு மேடை யாழ் கீக் சாலஞ்ச் - சீசன் 12. இதுவரை இப் போட்டியில் பங்கு பற்றி 65க்கும் அதிகமான வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டு 500க்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்களும் அதில் ஒருவராகலாம்.
இன்றே விண்ணப்பியுங்கள்
www.yarlithub.org/ygc
விண்ணப்பம் முடிவு திகதி - 14.09.2023
YARL GEEK CHALLENGE SENIOR SEASON 12
(17050)
மேலதிக விபரங்களுக்கு - 076 767 3158 | event@yarlithub.org

2A பெற்றுத் தரப்படும்
தமிழ்/ஆங்கில இரு மொழிகளில்
தனி/குழு ரியூட்டறி
இரசாயனம் - சிங்கம் மாஸ்டர்
T.P 077 665 5290
Bilology குருஜி PRN
T.P 074 099 9980

யாழ். மாநகர எல்லைக்குள்
வீடு வாடகைக்கு விடப்படும்
சிறிய கடையுடன்
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது
3 பேர் தங்கலாம்
அல்லது
நிறுவனத்துக்கு விரும்பத்தக்கது (17030)
076 219 7471

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-7239)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vaoancies@gmail.com

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2.700/=



(17019)
T.P:077 544 8503

கார் விற்பனைக்கு
நிசான் சணி
வாகன்
மொடல்
வெள்ளை நிற
கார் விற்பனைக்கு



076 748 3028
077 255 7761

வேலையாட்கள் தேவை
காசாளர்
சிட்டை எழுதுனர்
தேநீர் தயாரிப்பாளர்
உணவு பரிமாறுபவர்
உணவு பொதி செய்பவர்
இருபாலரும் விரும்பத்தக்கது (17046)
077 907 9888

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
ONLINE APPLICATIONS
VISA APPOINTMENTS
PASSPORT APPLICATION
POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும் (C-7239)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org